


# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 20.05.2012



முதற்பக்கம்
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
திருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
வளர்பிறை
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழ்முஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்க்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (49)

### 49. விவசாயப்படை என்ற போர்வையில் ஐ.தே.க அரசு அமைத்த குண்டர் படை!


Dudley Senanayake

விசுவமடு – தருமபுரம் பகுதிகளில் 1970ல் இராணுவப் பிரசன்னம் இருந்ததிற்கான காரணத்தை, அதன் பின்னணியுடன் முழுமையாக விளங்கிக் கொள்வது அவசியம். 1965 பொதுத்தேர்தலின் பின்னர் பிரதமர் டட்லி சேனநாயக்க தலைமையில் ஏழு கட்சிகளைக் கொண்ட கூட்டரசாங்கம் ஒன்று பதவிக்கு வந்தது. இந்த அரசாங்கத்தில் தீவிர சிங்கள இனவாதிகளான கே.எம்.பி ராஜரத்ன, ஆர்.ஜீ.சேனநாயக்க போன்றோரும், தமிழ் இனவாதக் கட்சிகளான தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் ஒன்றாக இணைந்தனர். எதிரும் புதிருமான இனவாதங்களை அவர்கள் பேசி வந்தாலும், பிற்போக்கு வர்க்க அரசியல் கொள்கைகள் அவர்களை ஒன்று சேர்த்தது.

அந்த அரசில் தமிழரசுக் கட்சியின் சார்பாக மு.திருச்செல்வம் (புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியினால் கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வத்தின் தந்தையார்) உள்ளூராட்சி அமைச்சராகவும், தமிழ் காங்கிரஸ் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரம் (புலிகள் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கத்தையும், அக்கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரனையும் கொழும்பில் வைத்துச் சுட்டுப் படுகொலை செய்த போது, அவர்களுடன் உடனிருந்து காயமடைந்தவர்) உதவி சபாநாயகராகவும் பதவி வகித்தனர்.

அந்த டட்லியின் அரசாங்கம் தனது விதேசிய சார்பு கொள்கைகளுக்கு இணங்க, உலக வங்கியின் ஆணைப்படி, பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வந்த அரிசி மானியத்தை வெட்டியதுடன், ரூபாயின் மதிப்பையும் 20 வீதத்தால் குறைத்தது. அதுமாத்திரமின்றி, வடபகுதி விவசாயிகளின் பிரதான உற்பத்திப் பொருட்களான வெங்காயம், மிளகாய் என்பனவற்றையும், மீனவர்கள் உற்பத்தி செய்த கருவாடு போன்றவற்றையும் கட்டுப்பாடின்றி இறக்குவதற்கு தனிப்பட்ட முதலாளிகளுக்கு அனுமதி வழங்கி, விவசாயிகள், மீனவர்கள் வயிற்றில் அடித்தது. அதற்கு தமிழ் கட்சிகள் இரண்டும் உடந்தையாகவே செயல்பட்டன.


இவ்வளவற்றையும் செய்து கொண்டு, விவசாய உற்பத்தியைப் பெருக்குவதாக பெரும் தடபுடல் பிரச்சாரத்தையும் செய்து வந்தது. அதன் நிமித்தம் வவுனியா போன்ற இடங்களிலிருந்த குளங்களையும், அதன் அருகிலிருந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் காட்டு நிலங்களையும் தனிப்பட்ட முதலாளிகளுக்குத் தாரை வார்த்தது. மகாவலி கங்கையை வடக்கே திருப்பப் போவதாகச் சொல்லிக் கொண்டு, அந்த நதி வடக்கே கொண்டுவரப்படும் வழி என எதிர்பார்க்கப்பட்ட நெடுங்கேணிப் பகுதியிலிருந்த நூற்றுக்கணக்கான வளமிக்க காணிகளை வட பகுதியிலிருந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், கம்பனிகளுக்கும் வாரி வழங்கியதுடன், அவர்கள் அக்காணிகளுக்கு போய் வருவதற்கென இலவசமாக ஜீப் வண்டிகளையும், காணிகளைச் செப்பனிடுவதற்கென பல இலட்சம் ரூபாய் பணத்தையும் கொடுத்தது.

அவ்வாறு காணிகளைப் பெற்றவர்களில் தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றோரும், கம்பனிகளில் யானை பீடிக் கம்பனி, ஆர்.வி.ஜீ. பீடிக் கம்பனி, கல்கி பீடிக் கம்பனி, மாவிட்டபுரம் டொலர் அலுமனியத் தொழிற்சாலை போன்றவையும் அடக்கம். (பின்னர் இந்த நிலங்களில் 1977ல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.npயவர்த்தனவின் ஐ.தே.க அரசாங்கம், சிங்களச் சிறைக்கைதிகளைக் குடும்பங்களுடன் குடியேற்றியதும், அவர்களைக் குடும்பங்களாகவே புலிகள் படுகொலை செய்ததும் பின்னாளில் நடந்த சம்பவங்கள்)

டட்லியின் அரசாங்கத்தின் உணவுற்பத்தி வாயளவிலும், பத்திரிகைகள் அளவிலும், விழாக்கள் அளவிலும் இருந்ததேயொழிய, நடைமுறையில் எதுவும் நடைபெறவில்லை. டட்லி தனது 'ரேட் மார்க்'கான சுங்கானுடன், நாடு முழுவதும் பயணம் செய்து வயல்களில் குனிந்தபடி நாற்று நட்ட அல்லது களை பிடுங்கிய கிராமப்புறத்து சிங்கள இளம் யுவதிகளைத் தனது கமராவினால் படம் பிடிக்கும் வேலை மட்டும்தான் ஒழுங்காக நடந்து வந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் விவசாயத்தைப் பெருக்குவதற்கென, இளைஞர்களைக் கொண்ட 'விவசாயப்படை' அமைக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பித்தது. இந்தத் திட்டம் ஐ.தே.க கட்சியின் 'குள்ளநரி' என வர்ணிக்கப்பட்ட, டட்லியின் அரசில் இராஜாங்க அமைச்சர் என்ற புதிய, பிரதமருக்கு அடுத்த அமைச்சுப் பதவியை வகித்து வந்த ஜே.ஆரின் திட்டம் எனச் சொல்லப்பட்டது. இந்த விவசாயப் படைக்கென நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கான சிங்கள, தமிழ், முஸ்லீம் இளைஞர்கள் திரட்டப்பட்டனர். அதற்குப் பொறுப்பாக இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற கப்டன் செனிவிரத்ன என்பவர் நியமிக்கப்பட்டார். அதன் தலைமைக் காரியாலயம் இராஜாங்கனையில் அமைந்தது.

வட பகுதியைப் பொறுத்தவரையில், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முத்தையன்கட்டு வாலிபர் குடியேற்றத் திட்டத்துக்கு அருகாமையில் ஒரு முகாமும், பரந்தன் – முல்லைத்தீவு வீதியில் 12ம் கட்டையில் (பிற்காலத்தில் 'றெட்பானா' அல்லது மாணிக்கப் பிள்ளையார் கோவிலடி என அழைக்கப்பட்ட) விசுவமடு படித்த வாலிபர் திட்டத்துக்கு அருகாமையிலும் இரண்டு விவசாயப்படை முகாம்கள் அமைக்கப்பட்டன. இந்த முகாம்களில் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளால் சிபார்சு செய்யப்பட்ட இளைஞர்கள் சேர்க்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அரச ஊழியரும், ஐ.தே.க பிரமுகருமான விசுவநாதன் என்பவர் விசுவமடுவில் அமைந்த முகாமுக்குப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார். ஒரு இராணுவ முகாம் பாணியிலேயே இந்த முகாம்களின் நிர்வாக அமைப்பு முறை உருவாக்கப்பட்டது.




'விவசாயப்படை வீரர்கள்' என அழைக்கப்பட்ட இந்த இளைஞர்களுக்கு முகாமில் இலவச தங்குமிடமும், உணவும் வழங்கப்பட்டதுடன், நாளொன்றுக்கு 2 ரூபா சம்பளமும் வழங்கப்பட்டது. இவர்கள் தாம் முகாமிட்டுள்ள பகுதிகளில் அரசாங்கத்தின் காணி, விவசாய, நீர்ப்பாசன இலாகாக்களுடன் இணைந்து வேலை செய்யும் ஒழுங்குகள் செய்யப்பட்டன. குளங்களைப் புனரமைக்க, வாய்க்கால்களைச் செப்பனிட என, இவர்களுக்கு பணிகள் வழங்கப்பட்டன.

ஆனால், உண்மையில் இந்த விவசாயப் படை ஐ.தே.க தனது அரசியல் நோக்கங்களை ஈடேற்றுவதற்காகவே மறைமுகமான பெயரில் அமைக்கப்பட்டது. பல இடங்களில் இந்த 'வீரர்கள்' அரசாங்கக் கட்சியான ஐ.தே.கவின் பிரச்சாரக் கூட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டனர். அத்துடன் எதிர்க்கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சியினதும், இடதுசாரிக் கட்சிகளினதும் கூட்டங்களைக் குழப்புவதற்கும் இவர்கள் பயன்படுத்தப்பட்டனர். ஆளும் கட்சியின் அடாவடித்தனங்களுக்கு உடன்படாதவர்கள் பழிவாங்கப்பட்டனர். அவ்வாறான ஒரு பிரச்சினையில் சாவகச்சேரியைச் சேர்ந்த சிவகுருநாதன் என்ற இளைஞர், முத்தையன்கட்டு விவசாயப்படை முகாமில் வைத்து மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை அவர் அங்குள்ள விவசாயப்படைப் படை முகாம் நிர்வாகிகளுடன் கொண்ட முரண்பாடு காரணமாகவே நிகழ்த்தப்பட்டது என்ற கருத்தும் நிலவியது.

அத்துடன், இந்தப்படை முகாம்கள் அமைந்திருந்த பகுதிகளில் விவசாயப்படையினருக்கும் அப்பகுதி உள்ளூர் மக்களுக்கும் அடிக்கடி



Yarl TV
புலிகளின் வதை முகாம்களில் ஒ... ஆண்டுகள் துன்... தோழர் மணிய... அனுபவத்தொட...
சிங்களவர்கள் ... நாங்கள்
யாழ்ப்பாணத்தி... அவலம்!
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட... புலிகளின் உள்ளக... போராட்டம் (பகுதி...
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட... புலிகளின் உள்ளக... போராட்டம் (பகுதி...
ராஜீவ் கொலையாளிக... குற்றப் பின்னண...
தமிழ் மக்கள் இ... வரும் சந்தர்ப்ப...
றொபேட் பிளே... தயவுசெய்து ஸ்ரீ... மக்களுக்குப் ப... சொல்லுங்கள் (...
றொபேட் பிளே... தயவுசெய்து ஸ்ரீ... மக்களுக்குப் ப... சொல்லுங்கள் (...

மோதல்களும் நிகழ்ந்து வந்தது. அப்படியான ஒரு பிரச்சினை விசுவமடு முகாம் பொறுப்பதிகாரிக்கும் தருமபுரம் மக்களுக்கும் இடையிலும் நிகழ்ந்தது. அதனால் ஆத்திரமடைந்த தருமபுரம் இளைஞர்கள், ஒருமுறை விசுவமடு முகாம் பொறுப்பாளர் விசுவநாதன் கிளிநொச்சி சென்றுவிட்டுத் திரும்புகையில், அவரை தருமபுரம் 3ம் யூனிற் பகுதியில் வழிமறித்து, அவரது உடைகளைக் கழற்ற வைத்து, உள்ளாடையுடன் மட்டும் ஊர்வலம் நடாத்திவிட்டுப் பின்னர் அவரது ஜீப் வண்டியில் செல்ல அனுமதித்த சம்பவமும் நடந்தது. பின்னர் விசுவநாதன் அந்த சம்பவம் பற்றி கிளிநொச்சி பொலிசில் முறைப்பாடு செய்வதற்காக, தருமபுரம் வழியாகச் செல்ல முடியாமல், முல்லைத்தீவு சென்று, அங்கிருந்து மாங்குளம் சென்று, பின்னர் கிளிநொச்சி சென்ற, அதாவது தலையைச் சுற்றி மூக்கைத் தொட்ட நிகழ்வும் நடந்தது.

அதிகாரிகளின் இந்தவிதமான நடத்தைகளால், விசுவமடு முகாமில் இருந்த விவசாயப்படை வீரர்களில் பெரும்பாலானவர்கள் அதிகாரிகளுக்கு எதிரான நிலையிலேயே இருந்தனர். அதனால் அதிகாரிகளுக்கும் வீரர்களுக்கும் இடையில் எப்பொழுதும் முறுகல் நிலையே நிலவி வந்தது. அதிகாரிகள், இளைஞர்களுக்கு என அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உணவுகளை அவர்களுக்குச் சரியாகக் கொடுக்காமல், அவற்றைக் களவாக விற்பனை செய்வதாகவும் இளைஞர்களுக்குத் தெரிய வந்தது. இந்தப் பின்னணியில், ஒரு இரவு அந்த முகாமின் உணவுக் களஞ்சியம் திடீரென எரிந்து சாம்பராகியது. அதற்கான காரணகர்த்தாக்கள் எனக் குற்றம்சாட்டப்பட்டு, சில இளைஞர்கள் பொலிசாரிடம் அதிகாரிகளால் பிடித்துக் கொடுக்கப்பட்டனர்.

இந்தச் சூழ்நிலையில் எமது புரட்சிகர இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் கம்பஹா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ்.டி.பண்டாரநாயக்க (எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவுடன் சேர்ந்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தவர்களில் ஒருவரான தோழர் எஸ்.டி.பண்டாரநாயக்க, எஸ்.டபிள்ய+.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் ஒன்றுவிட்ட சகோதரர். நீண்டகாலம் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அவர், 1960களின் பிற்பகுதியில் அக்கட்சியின் அப்போதைய தலைவர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவுடன் முரண்பட்டுக்கொண்டு எமது கட்சியில் இணைந்திருந்தார்) எமது விவசாயிகள் சங்கத்தின் அழைப்பை ஏற்று 1968ம் ஆண்டு 3 நாட்கள் கிளிநொச்சிக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அவரது விஜயத்தின் போது, அவர் எமது விவசாய சங்கங்களும் தொழிற்சங்கங்களும் பலமாக இருந்த வட்டக்கச்சி, இராமநாதபுரம், திருவையாறு படித்த வாலிபர் திட்டம், மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றத் திட்டம், விசுவமடு படித்த வாலிபர் திட்டம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வட்டக்கச்சி அரசாங்க விவசாயப் பாடசாலை உட்பட பல இடங்களுக்கும் விஜயம் செய்து, அங்குள்ள மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை ஆராய்ந்ததுடன், அந்த 3 நாட்களும் சாதாரண விவசாயிகளின் குடியேற்றத்திட்ட வீடுகளிலேயே உணவுண்டு, அவர்கள் கொடுத்த பாய்களில் உறங்கி, அவர்களைப் போலவே காடுகளுக்குச் சென்று மலசலம் கழித்து, குளத்து வாய்க்கால்களில் குளித்து, கிளிநொச்சி மக்களின் இதயங்களை அள்ளிச் சென்றார்.

பின்னர் அவர் அந்த மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியதுடன், பெரும் மழை காரணமாக அழிந்து போன விசுவமடு விவசாயிகளின் மிளகாய் பயிர்களுக்கு நஸ்டஈடு பெற்றுக் கொடுப்பதற்காக, அங்கிருந்து ஒரு தூதுக்குழுவை கொழும்புக்கு அழைத்துச் சென்று, அப்போதைய காணி, நீர்ப்பாசன அமைச்சர் சி.பி.டி. சில்வாவுடன் ஒரு சந்திப்புக்கும் ஏற்பாடு செய்தார்.

எஸ்.டி.பண்டாரநாயக்க அவர்களின் கிளிநொச்சி விஜயத்தின் போது அவர் விசுவமடு படித்த வாலிபர் திட்டத்துக்கு விஜயம் செய்வதுடன், அங்கு கூட்டம் ஒன்றிலும் உரையாற்றுவதற்கு நாம் ஒழுங்கு செய்திருந்தோம். விசுவமடுவில் எமக்கு மிகவும் பலமானதொரு ஆதரவுத்தளம் இருந்ததால், அவரது வருகை அங்கு ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது. அவரது வருகையை அறிந்த விசுவமடு விவசாயப்படை முகாம் அதிகாரிகள், தமது சில வீரர்களை அனுப்பி அவரது கூட்டத்தைக் குழப்புவதற்கு திட்டமிட்டனர். (அதில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கிளிநொச்சித் தொகுதியின் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா.பொ.இரத்தினத்துக்கும் தொடர்பிருந்த விடயம் பின்னர் எமக்குத் தெரிய வந்தது) இந்த குழப்ப விவகாரத்தை விவசாயப்படையில் எம்முடன் தொடர்பிலிருந்த சிலர் எம்மிடம் ஏற்கெனவே தெரிவித்துவிட்டனர்.

எஸ்.டி.பண்டாரநாயக்க விசுவமடுவுக்கு வந்து கூட்டமும் ஆரம்பித்த வேளையில், அதைக் குழப்புவதற்காக அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட சில இளைஞர்களும் அங்கு வந்து சேர்ந்தனர். இந்த விடயங்களுக்கிடையில், எஸ்.டி.பண்டாரநாயக்காவின் கிளிநொச்சி வருகைக்கு எதிராக, தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கா.பொ.இரத்தினம் மேற்கொண்ட கீழ்த்தரமான செயல்களை இங்கு புட்டு வைப்பது அவசியம். 'ஆண்ட தமிழினத்தை சிங்களவன் ஆளுகிறான்' எனப் பேசிக்கொண்டு, அந்த 'ஆளுகின்ற' சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரை, அதுவும் பண்டா – செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து, இனவாதி ஜே.ஆர். 1957ல் கண்டிக்கு புத்த பிக்குமாரையும் அழைத்துக்கொண்டு யாத்திரை சென்ற போது, தனது தொகுதியான கம்பஹாவின் இம்புல்கொட என்ற இடத்தில் வைத்து அடித்துக் கலைத்து, திரும்பவும் கொழும்பு நோக்கி ஓட வைத்த ஒருவரை, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, கிளிநொச்சிக்கு வந்த அவரை கா.பொ.இரத்தினம் எப்படித் தடுக்க முயன்றார் என்பதை அறிந்தால், இப்போதிருப்பதற்குத் தலைகீழாக, இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாகவும், சிங்களவர்கள் சிறுபான்மையாகவும் இருந்திருந்தால், அவர்கள் கதி என்னவாகியிருக்கும் என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

தொடரும்

முன்னைய பதிவுகள்